ஸ்ரீ:

சார்வரி ௵ ஐப்பசி ௴
அக்டோபர் - நவம்பர் 2020

மலர்: 3
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





சார்வரி ஹு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2020

மலர்: 3
இதழ்: 7

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: P.S. Anand & K. Akash
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com    Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

‘கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்’ என்பது மூதுரை. இது ஊருக்கும் கோயிலுக்கும் உள்ள அப்ருதக் ஸித்தத்வத்தை (தனித்து இருக்க முடியாத தன்மையை) காட்டுவதாம். இதை – ‘கோயிலைப் பார்த்த ஊர்’ என்றும் ‘ஊரைப் பார்த்த கோயில்’ என்றும் இருவகையாக்கலாம். ஸ்ரீரங்கம் – திருமலை - பெருமாள் கோயில் போன்ற ஸ்வயம்-வ்யக்த / ஸைத்தவ க்ஷேத்ரங்களின் உத்ஸவாதி க்ரமங்களை ஒட்டியே அவ்வூர் மக்களின் வழக்கங்கள் அமையும். மற்றதான மானுஷ க்ஷேத்ரங்களின் உத்ஸவாதி க்ரமங்கள், ஊர் மக்களின் அபிலாஷையை ஒட்டி அவ்வப்போது மாறுதலுக்கு உட்படும். நம் திருமயிலை தேசிகன்-ஸ்ரீநிவாஸன் திருக்கோயிலை இந்த இரண்டாம் வகையில் சேர்க்கலாம்.

நாட்டு நிலைமைக்குத் தக்கவாறு, கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்பட்ட நிலையில், இவ்வாண்டு வார்ஷிகோத்ஸவங்களான ‘ஸ்வாமி தேசிகன் ஜனநோத்ஸவம் / திருப்பவித்ரோத்ஸவம்’ இரண்டும் ஆகம விதிகளுக்கு குந்தகம் இல்லாமல் – அதே ஸமயம் ஜன-நெருக்கடியை தவிர்த்த நிலையில் - நடந்தேறின.

கட்டுப்பாடுகள், ஸேவார்த்திகளுக்கு சில அஸௌகர்யத்தை அளித்ததை நன்கு அறிவோம். குறிப்பாக வயோதிகர்களும்-ஸ்த்ரீகளும்-சிறுவர்களும் அதிகமான கட்டுப்பாட்டுக்கு இலக்காகி உத்ஸவங்களை ஸேவிக்கமுடியாமல் போனது. ஸேவார்த்திகளுக்காகவே இருக்கும் நம் கோயிலுக்கு இது ஒவ்வாததுதான். நம்மால் செயற்பாலதென்? இக்குறையை ஓரளவு போக்க, இம்மாத மலரின் ‘உத்ஸவ நிழற்படங்கள்’ மிகவும் சீரிய முறையில் வெளியிடப்பட்டுள்ளன. கண்டு சேமித்து தாபம் தீர்மின் !

எம்பெருமானின் ஆயிர நாமங்களில் ‘பய-க்ருத் / பய–நாசந:’ என்ற இரண்டும் அடுத்தடுத்து அநுஸந்திக்கப்படுகின்றன. இதற்கு, நம் கருமங்களுக்குத் தக்கவாறு அச்சத்தை விளைவிப்பவனும் எம்பெருமானே; வேங்கடவனைத் ‘தொழ, நம் வினை ஓயுமே’, எனப் பொருளாம். விரைவிலேயே, மாளாத வினை அனைத்தும் மாள நாம்போய், மலர்மகளார் அன்பு பூணும் தோலாத மாமணிக்குத் தொண்டு பூண்டு தொழுது உகந்து தோத்திரங்கள் பாடியாடும் பாக்கியம் அருள, வேண்டி நிற்போம்.

பாகவதர்கள் உகப்புக்காக ‘ஸந்தேசத்தைத்’ தொடரும் இம்மாத மலரில் நாம் மேலும் கண்டு களிக்க இருப்பவை .......

- ✓ ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்
- ✓ திருப்பவித்ர உத்ஸவம்

இவற்றின் ஒளிப்படங்களுடன், சிறப்புக் கட்டுரைகள், தேசிக தர்சனம் ஆங்கிலத் தொடர் ஆகியவை.

# Great To Be Back To The Good Old Days

FROM THE DESK OF TRUSTEES



As notified in the previous issue, the temple was opened to the public on 02-09-2020 and there has been a steady increase in the number of devotees visiting the temple. While it is heartening to note that things have changed for the better, we must also remember that we are still not totally out of the lockdown and are obliged to follow the govt. guidelines.

Swami Desikan's Varshika Thirunakshathra Mahothsavam (18-09-2020 to 27-09-2020) was conducted with customary grandeur, except Thiruveethi Purappadu. Significantly, big Vahanams were at service during the processions conducted inside the temple premises. Scholars in Divya Prabandham, Rug Veda, Yajur Veda and Sama Veda participated in the processions held inside the temple and rendered the atmosphere reverberating.

Similarly, the Annual Pavithrothsavam (01-10-2020 to 07-10-2020), which is a uniquely special festival in our temple, was held with divine fervour. The Uthsavam witnessed performing of Homam, along with the recital of the Divya Prabandham and Vedas on all days, adhering to the government protocols. On the last day, all the Archakas, Ubhaya Veda Vidwans, Swayampakis and staffs were rewarded with Sambavanai, including Veshti and Pudavai.

We express our gratitude to Archakas, Swayampakis, office staff, Vedaparayana Sabha, Srivaishnava Sripatham Kainkarya Association and the donors for their co-operation in making the two major festivals a grand success.

Sri S. Sridharan of Alarmelmangapuram, Mylapore, donated provisions to all the employees of the temple and we thank him for the gesture.

We would like to inform the devotees that the annual Navarathri festival, Peyazhwar Uthsavam and Panchami Theertha Uthsavam for Thayar will be performed in the usual manner, of course, observing the safety norms.

# விளம்பி வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் / நவம்பர் | ஐப்பசி | | | | | |
| 17.10.20 | 1 | ப்ரதமை | சனி | சித்திரை | ஐப்பசி மாதபிறப்பு – நவராத்ரி உத்ஸவம் – 1ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் 1ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ சேஷாத்ரி |
| 18.10.20 | 2 | த்விதீயை | ஞாயிறு | ஸ்வாதி | நவராத்ரி உத்ஸவம் – 2ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் 2ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன் |
| 19.10.20 | 3 | திருதீயை | திங்கள் | விசாகம் | நவராத்ரி உத்ஸவம் – 3ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 3ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ D. சேஷாத்ரி |
| 20.10.20 | 4 | சதுர்த்தி | செவ்வாய் | அநுஷம் | நவராத்ரி உத்ஸவம் – 4ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 4ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ N.R.S. ராமக்ருஷ்ணன் |
| 21.10.20 | 5 | பஞ்சமி | புதன் | கேட்டை | நவராத்ரி உத்ஸவம் – 5ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் 5ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர் |
| 22.10.20 | 6 | ஷஷ்டி | வியாழன் | மூலம் | ஸேனைநாதன் சாற்றுமுறை நவராத்ரி உத்ஸவம் – 6ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 6ம் நாள் – காலை பெருமாள் பேயாழ்வார் ஸேனைநாதன் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், ஸேனைநாதன் திருமஞ்சனம் – ஆஸ்தானம் ஸேவாகாலம் சாற்றுமுறை மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – P.D.R. ட்ரஸ்ட் C/O. ஸ்ரீ சேஷாத்ரி. ஸேனைநாதன் – ஸ்ரீமதி ஷோபனா ராமரத்தினம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 23.10.20 | 7 | ஸப்தமி | வெள்ளி | பூராடம் | நவராத்ரி உத்ஸவம் – 7ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் 7ம் நாள் – காலை – பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், தேசிகன் 27ஆம் நாள் விடாயாற்றி திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ K.S. ஸேதுராமன் காலை தேசிகன் உபயம் ஸ்ரீ S.K..ஸ்ரீநிவாஸன் மாலை புஷ்ப பல்லக்கு உபயம் ஸ்ரீ ராகவன் பண்டு ஸ்ரீ மது தேசிகன் குடும்பத்தினர் |
| 24.10.20 | 8 | அஷ்டமி | சனி | உத்தராடம் | பொய்கையாழ்வார் சாற்றுமுறை நவராத்ரி உத்ஸவம் – 8ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 8ம் நாள் – காலை – பெருமாள், பொய்கையாழ்வார், பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், பொய்கையாழ்வார் திருமஞ்சனம் ஸேவாகாலம் சாற்றுமுறை – மாலை – பெருமாள், தாயார், பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ V . ராமபத்ரன். பொய்கை ஆழ்வார் – ஸ்ரீ T.R. தேவநாதா சார்யர் |
| 25.10.20 | 9 | நவமி | ஞாயிறு | ச்ரவணம் | பூதத்தாழ்வார் சாற்றுமுறை நவராத்ரி உத்ஸவம் – 9ம் நாள் – மஹாநவமி – பேயாழ்வார் உத்ஸவம் – 9ம் நாள் – காலை – பெருமாள் பூதத்தாழ்வார் தேசிகன் பேயாழ்வார் உள் புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் தேசிகன் திருமஞ்சனம் ஸேவாகாலம் சாற்று முறை – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல். இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | நவராத்ரி – ஸ்ரீ S. நாராயணன் – ஸ்ரீ T. நாராயணன். பூதத்தாழ்வார் – ஸ்ரீ S.T. நரஸிம் ஹாசார்யர் குடும்பத்தினர் |
| 26.10.20 | 10 | தசமி | திங்கள் | சதயம் | பேயாழ்வார் சாற்றுமுறை – காலை – மங்களாசாஸனம், பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை பெருமாள், தாயார், பேயாழ்வார் பத்தி உலாத்தல். பெருமாள், பேயாழ்வார் உள்புறப்பாடு – இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 27.10.20 | 11 | ஏகாதசி | செவ்வாய் | பூரட்டாதி | பேயாழ்வார் கந்தபொடி வசந்தம் – காலை – பேயாழ்வார் உள்புறப்பாடு பின்பு பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – பெருமாள் உள்புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 28.10.20 | 12 | த்வாதசி | புதன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 29.10.20 | 13 | த்ரயோதசி | வியாழன் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 30.10.20 | 14 | சதுர்தசி | வெள்ளி | ரேவதி | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | அழிசூர் ஸ்ரீ A. வீரராகவன் – ஸ்ரீ A.V. ராமன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31.10.20 | 15 | பௌர்ணமி | சனி | அச்வினி | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் உள் புறப்பாடு | ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன் |
| 1.11.20 | 16 | ப்ரதமை | ஞாயிறு | பரணி | திருமால்வடை | |
| 2.11.20 | 17 | த்விதீயை | திங்கள் | கார்த்திகை | திருமங்கையாழ்வார் | |
| 3.11.20 | 18 | திருதீயை | செவ்வாய் | ரோஹிணி | மாலை – கண்ணன், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 4.11.20 | 19 | சதுர்த்தி | புதன் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 5.11.20 | 20 | பஞ்சமி | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 6.11.20 | 21 | ஷஷ்டி | வெள்ளி | புனர்வஸு | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | |
| 7.11.20 | 22 | ஸப்தமி | சனி | புஷ்யம் | திருமால்வடை | |
| 8.11.20 | 23 | அஷ்டமி | ஞாயிறு | ஆயில்யம் | திருமால்வடை | |
| 9.11.20 | 24 | நவமி | திங்கள் | மகம் | திருமால்வடை | |
| 10.11.20 | 25 | தசமி | செவ்வாய் | பூரம் | ஆண்டாள் | |
| 11.11.20 | 26 | ஏகாதசி | புதன் | உத்தரம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 1ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – பத்ம வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ D.S. ராஜகோபால் |
| 12.11.20 | 27 | த்வாதசி | வியாழன் | ஹஸ்தம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 2ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – ஸூர்யப்ரபை உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. வரதாச்சாரி |
| 13.11.20 | 28 | த்ரயோதசி | வெள்ளி | சித்திரை | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 3ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – கருட வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ K.L. ராகவன் |
| 14.11.20 | 29 | சதுர்தசி | சனி | ஸ்வாதி | தீபாவளி பண்டிகை, தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 4ம் நாள் – காலை – பெருமாள் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை பொழுதுடன் ஆராதனம் – பெருமாள், தாயார் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் – ஸ்ரீ V.C. ஸ்ரீபதி. தீபாவளி – ஸ்ரீ R. வாஸுதேவன் |
| 15.11.20 | 30 | அமாவாசை | ஞாயிறு | விசாகம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 5ம் நாள் அன்னகூட உத்ஸவம் – காலை – பெருமாள் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# ஜ்யோதி - உபய வேத அநுபவம்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

ஸம்ஸ்க்ருத பதமான ஜ்யோதிக்கு சுடர் / ஒளி / சோதி என்று பொருள்.

இந்த சொல்லானது வேதத்திலும், அதன் உட்பொருள்களை விளக்கும் தமிழ் வேதத்திலும் பரக்கப் புகழப்படுகின்றது.

ஓஷணம் - ப்ரஹ்மமேதம் இரண்டிற்கும் பொதுவான மந்த்ரத்தில் இந்த ஜ்யோதியைப்பற்றி போற்றப்படுவதை சற்றே அநுபவிப்போம்.

**1) ஜ்யோதிஷ்மதீம் — ஒளிர்வதால்**

**துயர் அறு சுடர் அடி** என்று பின் உரைத்த திருவாய் மொழியின் படி இந்த ஒளியானது, ஒளிர்வதுமட்டும் இல்லாமல், துயரங்களை அறுக்க வல்லது. இந்த தனித்தன்மை பொருந்திய சுடரானது ஸ்திரமானது. எவ்வித காரணமும் இல்லாமல் ஒளிரும் சோதி.

**மற்றோர் பரஞ்சோதியின்மையின்** என்ற அருளிச்செயலை சற்றே நோக்கினால் இந்த சோதியானது **அந்யாத்ருசமானது (தனித்து இருத்தல்) ,** எல்லா வஸ்து க்களை விடப் பெரியது என்பது தெளிவாகிறது. அதாவது வேறொரு பரஞ்சோதி இல்லை என்ற மறையின் நிலை தெளிதாகிறது.

**சோதி ஆகி எல்லா உலகும் தொழும் - ஸப்தானாம் கிரீணாம் பரஸ்தாத் வித்தம் வேத்யம்** என்ற ச்ருதியின் படி திருவேங்கட மலை மேல், அனைத்துலகும் அநவரதம் தொழுதெழும் ஆதி மூர்த்தியாய் (சோதியாய்), ஸத்ருசமாய் (எவ்வித மாற்றமும் இல்லாமல் - அதாவது விரும்பித் தொழுவார்க்கு மெய்யனாய், வரப்ரஸாதியாய்) ஒளிர்வது.

**2) ஜ்யோதிஷ்க்ருதம் —ஒளியை உண்டாக்குவதால்**

ஒளியானது ஒளிகளை ஏன் உண்டாக்க வேண்டும்? பலவிதமாக இதற்கு பதில் அளிக்கலாம்.

**கொன்றேன் பல்லுயிரை குறிக்கோள் ஒன்று இலாமையினால், தெரியேன் பாலகனாய் பல தீமைகள் செய்துமிட்டேன்** என்றவாறு அபுத்தி பூர்வ - புத்தி பூர்வ பாபங்களுக்கு வருந்தும் ஸமயம் - அக இருள் அகலும் போது - இந்த ஒளியே - அதனால் ஏற்படும் ப்ரஜ்யோதி (ஜ்ஞானம்) காரணமாக இருள் (அஜ்ஞானம்) ஒழிகிறது.

இந்த ஒளி வைதிக மதத்தை ஸ்தாபிக்கும், காக்கும் பொருட்டு - மயர்வற மதி நலம் அருளப்பெற்ற ஆழ்வார்களாகவும், ஸ்ரீ பாஷ்யகாரராகவும், ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் என்றும் பல ஒளிகளாக அவதாரம் செய்தமை.

**அங்கண் இரண்டும் கொண்டு எ(ந)ங்கள் மேல் நோக்கும் சோதி -** இந்த ஸ்திர ஜ்யோதிக்கு இரண்டு கண்கள் - (இரண்டு ப்ரஜ்யோதிகள்) . இதில் என்ன வியப்பு? என்று வினவினால் - இக்கண்கள் ஸாமான்ய கண்கள் அல்ல. ஒன்று ஸூர்ய நேத்ரம் - நம் பாபங்களைப் பொசுக்க வல்லது. இரண்டாவது சந்த்ர நேத்ரம் - குளிர்ந்து கடாக்ஷிப்பது.

**3) ஜ்யோதிர்விதம் — ஒளி போல் மிளிர்வதால்**

மிளிர்வது ஜ்யோதியின் லக்ஷணமாகும். இந்த மிளிரும் தன்மை தேஜஸ் என்று வழங்கப்படுகிறது.

**பலபலவே சோதி வடிவு பண்பு எண்ணில்**

தேஜஸ்ஸானது - பரமபுருஷனுக்கே உரித்தது , எப்படி அவனது திவ்ய பூஷணங்கள், கல்யாண குணங்கள், திவ்ய போகங்கள், திவ்ய ஜ்ஞானங்கள் முதலியன அஸங்க்யேயமாக உள்ளனவோ, அவ்வாறே இந்த தேஜோமயமான கல்யாண திவ்யமங்கள ரூபங்கள் அஸங்க்யேயமானவை. இப்படி தேஜோமயமாக எங்கும் உள்ளதால் ஸர்வவ்யாபீ என்று ஏத்தப்படுகிறான். ஸர்வதேசங்களிலும், ஸர்வ காலங்களிலும் இந்த தேஜஸ்ஸானது மாறாமல் இருத்தலால், ஜ்யோதிர்விதத்வம் ஸ்பஷ்டமாகிறது

**ஒளியை அறிபவன் என்றும் பொருள் கூறலாம் -** ஜகத்காரணமாக பரமபுருஷன் ஒளிர்வதால், தன்னிடம் இருந்து தோன்றும் சோதிகளை நன்கு அறிந்தவன், அச்சோதிகளை மிளிரச்செய்து (அந்தராத்மாவாக) தன்னுள்ளே கொண்டவன் - **சுடர் ஒளியாய் நெஞ்சினுள்ளே தோன்றும் என் சோதி நம்பி** - நெஞ்சில் நிறுத்த முற்படும் போதே ஸ்ரீ வைகுண்டம், துவராபதி இத்யாதி க்ஷேத்ரங்களில் மிளிரும் சோதி, பரமபக்தரான - கல்பஸூத்ர வ்யாக்யாதாவான - ஸ்ரீ பெரியாழ்வார் மனத்தில் நிரந்தரமாக, அவ்யாஹதமாக இடங்கொண்டு மிளிர்தமையால் - ஜ்யோதியின் ஸௌலப்ய, ஸௌசீல்ய குணங்கள் திண்ணமாகின்றன. மேற் கூறினாற்போல் **(ஜ்யோதிஷ்க்ருதம்)** , ஸ்ரீ விஷ்ணு சித்தர் என்ற ஜ்யோதிக்கு காரணமாக இருந்தமை விளங்குகிறது.

**4) பாஸ்வதீம் — அக்னியாக இருந்து மிளிர்வதால்**

வைதிக மதத்தின் முக்யமான கர்மாக்கள் அனைத்திலும் அக்னி மூலம் / அக்னியாக ஆராதிக்கப்பட்டு, **நல்லவெந்தழல் மூன்று நால் வேதம் ஐவேள்வியோடு ஆறங்கம் வல்ல அந்தணர் மந்திர மொழியுடன்** ஸமர்ப்பிக்கும் பாகங்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வரம் தரும் மன்னவனாய்த் திகழ்தல்.

**5) ஜ்வலந்தீம் — கொழுந்து விட்டு ஜ்வாலையாக இருப்பதால்**

பரஞ்சோதியானது ஏன் கொழுந்து விட்டு ஜ்வாலையாக இருக்கிறது? அப்படி இருப்பின் அணுக முடியுமோ? ஐயமொன்றில்லை. **மன்னா இம்மனிசப் பிறவியை நீக்கி, தன்னாக்கி தன் இன்னருள் செய்யும் தலைவன்** என்றவாறும், **ஓயும்மூப்பு பிறப்பிறப்புப் பிணி, வீயுமாறு செய்வான் திருவேங்கடத்தாயன்** என்றவாறும் சரணாகதி செய்த க்ஷணமே பிணியைப் பொசுக்கும் தன்மை - **இந்நோய்க்கும் ஈதே மருந்து** - என்று மறுபிறவித் துயர் வாரா வகைச் செய்யும் ஜ்வாலை.

இப்படி இந்த ஜ்யோதியை (ஜ்வாலையை - அதன் தன்மையை) ஸ்மரிக்கும் பத்துடை அடியவர்க்கு எளிதானது இச்சோதி.

**6) மல்மலாபவந்தீம் -- செவிக்கினிய விஷயங்களை, செஞ்சொற்களை உண்டாக்குவதால்**

**பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:** என்று ச்ருதி. மங்களகரமான- ஸத் விஷயங்களை பகவத் தாஸர்களான தேவர்கள் விரும்பிக் கேட்கின்றனர் - அதாவது உபய வேத, இதிஹாஸ - புராண -ஸ்தோத்ர பாராயணங்கள், பஜனைகள், நாம ஸங்கீர்த்தனைகள் இவைகள் மூலம் தேவ பரிபந்தினர்கள் (எதிரிகள்) - அரக்கர்கள் விரட்டி அடிக்கப்படுகிறார்கள். எங்கு அரக்கர்கள் இல்லையோ, அங்கு மங்களங்கள் உண் டாகின்றன. ஸகல தேவதா ஸாந்நித்யம் ஏற்படுகிறது. இப்படியாக, செவிகளால் ஆர தன் கீர்த்திகளை அநுபவிக்க மேல் உள்ளபடி பல கைங்கர்யங்களை பாகவதர்கள் மூலம் நடத்திக் கொண்டு அநுபவித்தல்.

**7) தீப்யமானாம் — ப்ராசித்து அஜ்ஞானத்தை விரட்டி அடிப்பதால்**

சரீரமும் ஆத்மாவும் ஒன்று போன்ற அஜ்ஞானங்களை, குழப்பங்களை **உடலம் அழித்திடும் உள்ளுயிர் ஒன்று அழியாது எனைப் போல்** என்று கீதாசார்யனாகத் தானே அவதரித்து உபதேசித்து, தெளிவுறச்செய்து இன்பக்கதி செய்யும் சோதி.

**8) ரோசமானாம் — சுடராக இருப்பதால்**

**நாக்கொண்டு மானிடம் பாடேன், என்னாவிலின் கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன் என்று உறுதியாக இருக்கும் நல்லோர்க்கு தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் பொழுது போக்குவதற்காகவே** சுடராக விளங்கும் சோதி.

**9) அஜஸ்ராம்—அழிவில்லாமை**

**பிறப்பொடு மூப்பொன்று இல்லவன் தன்னை,** - என்றபடி ஸாமான்ய ஜீவர்கள் அநுபவிக்கும் பிறப்பிறப்புச் சுழல், ப்ராரப்த - ஸஞ்சித கர்ம பலன்களுக்கு அப்பாற்பட்டவன். இது தான் ஜ்யோதிக்கு ஆதி, இது தான் அந்தம் என்றில்லாமல், அழியாத்தன்மையுடன் விளங்குவதால் **இறைஞ்சப்படும் பரனாக, ஈசனாக** இருத்தல்.

**10) ப்ருஹஜ்யோதிஷம் — பரஞ்சோதியாக இருப்பதால்**

ஜகத்காரணமாக, லக்ஷ்மீபதியாக இருப்பதால் ப்ருஹத்வம் ஸித்தமாகிறது. **நாடிநீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்** என்று பஹுசாஸ்த்ர ச்ரவணமனனங்களைப் பண்ணுதலால் தெளிவான ஜ்ஞானம் **(நாராயண பரப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: - நாராயண பரோ ஜ்யோதி : ஆத்மா நாராயண: பர:)** ஏற்படும். எனவே இவனை விட பெரிய சோதி இல்லை.

**11) போதயந்தீம் — விழிப்பூட்டுவதால்**

தர்மங்களை ஸ்தாபிக்க, இடையூறுகளை ஒழிக்க தனது திவ்யாவதாரங்கள் மூலம் தான் ஒருவனே ஜகத்ரக்ஷகன் என்று விழிப்பூட்டியமை. **அவனே அவனும், அவனும் அவனும், அவனே மற்றெல்லாமும் - ஸர்வஜகஸ்ரஷ்டா** என்று விழிப்பூட்டியமை. மேலும் ஸ்திர ஜ்யோதியில் ஈடுபடுவோர்க்கு இந்த்ரியங்கள் அனைத்தும் அவனை அநுபவிக்கவே **(கைகளால் ஆரத் தொழுது, கண்களால் காண வருங்கொல் என் ஆசையால், செவிகளால் ஆர நின் கீர்த்திக்கனி)** என்று விழிப்புணர்வு அருளுதல்.


ப்ரஹ்ம தேவனைப் படைத்தது, ருத்ரனை தன் பாதோதகம் மூலம் சுத்தனாக்கியது, எவராலும் போக்க முடியாத ருத்ரனின் சாபத்தைப் போக்கியது மூலம் தேவவ்யாபாரங்களும் தன் இஷ்டப்ரகாரம் என்று தனது ஸர்வேச்வரத்வத்தைப் பற்றி விழிப்பூட்டியமை.

**12) ஜாக்ரதீம் — விழிப்புடன் இருத்தலால்**

தன்னைப்பற்றி விழிப்புற்றவர்க்கு, திருவனந்தாழ்வான் மேல் யோகநித்ரையில் இருந்தாலும் ஸதா அடியவர்களைப்பற்றி விழிப்புடன் இருப்பது **(எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து)**. தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு **தன்னைத் தந்து கற்பகமாய் இருந்து,** அஜ்ஜனங்களுக்கு அநுபவைகவிநாச்யமான பாபங்களை ஒழிப்பதில் மிகுந்த விழிப்புடன் இருத்தல்.

**13) த்வா ஸாதயாமி — இது மேற்கூறப்பட்ட அனைத்துக்கும் பொதுவானது**

பரஞ்சோதியாய்த் திகழும் பரம்பரனே - **போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு காலங்கள்.** கழிந்த காலங்களில் யானே என் தனதே என்று இருந்து அஹங்கர மமகாரங்கள் மிகுந்து ஸ்வாபிமானத்தில் மூழ்கியிருந்தேன். உன்னுடைய க்ருபை யினால் **யானே நீ என் உடைமையும் நீயே** என்று தெளிந்தேன். இந்த அஸ்கலித ஜ்ஞானத்தை அருளிய உன்னைச் **சிந்தையாலும், சொல்லாலும், செய்கையாலும் தந்தை தாய் என அடையச்செய்து** பரமப்ராப்யத்தை அருள வேண்டும்.









ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்










ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்















ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:









ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்














ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்
வார்ஷிக உத்ஸவம்













ஸ்வாமி ஶ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்









ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்









திருப்பவித்ர உத்ஸவம்













## திருப்பவித்ர உத்ஸவம்




















திருப்பவித்ர உத்ஸவம்







திருப்பவித்ர உத்ஸவம்











ஸ்ரீ:



திருப்பவித்ர உத்ஸவம்



ஒளிப்படம்



ஓவியம்: Dipthi S, M. Sc. Physics, VIT, Vellore.

ஸ்ரீ:

# திருமகள் கேள்வன்

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

ஸ்ரீமந்நாராயணன் பவித்ரமானவன். திவ்யமங்கள ஸ்வரூபியான எம்பெருமான் ஜீவன்களை படைக்கும் காலத்தில் ஹிரண்யகர்ப ரூபியாகவும், காக்கும் பொழுதில் ஸ்ரீஹரியாகவும், ஸம்ஹரிக்கும் காலத்தே ஸங்கர்ஷணனாகவும், மோக்ஷம் அருளும் பொழுதில் பரவா ஸுதேவனாகவும் அநுக்ரஹிக்கின்றான்.

**'ஸமஸ்தசிதசித் ப்ரபஞ்ச:'** என்கிற பாஞ்சராத்ர ஸம்ஹிதை வாக்கின்படி, 'சித் அசித்' என்று அனைத்திற்கும் ஏக சேஷியாக எம்பெருமானும் பிராட்டியும் உள்ளனர். 'ஏக சேஷி' எனும் போது அங்கு இரண்டு என்பது பொருளினை இழந்து, எம்பெருமானும் பிராட்டியும் 'ஏக ஸ்வரூபம்' என்பது நிர்தாரணம் ஆகின்றது. 'ச்ரிய: பதி' என்பதனால் ஏற்றம் கொள்ளும் எம்பெருமானின் ப்ரபாவத்தினை, பிராட்டியினை முன்னிறுத்தி ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் கொண்டாடும் கோலாகாலத்தில் அந்வயிப்பது ஸுகாநுபவம்.

**'மாதவா' என்று மதிமயங்கும் கோதை நாச்சியார்**

பிராட்டியினை முன்னிறுத்தி ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்கள் என்பதால் பூமிப் பிராட்டியாம் கோதை நாச்சியாரின் திவ்ய ஸூக்திகளை முதலில் ஸேவிப்போம்.

நாச்சியார் திருமொழியில், ஸ்ரீக்ருஷ்ணனின் நேத்ரங்கள் அருளினைப் பொழியும் தன்மையுடையன எனும் பொருள்பட, **'கள்ள மாதவா கேசவா உன் முகத்தன கண்கள் அல்லவே'** என்கின்றாள் கோதை நாச்சியார். நாங்களிழைக்கும் சிற்றிலினை (கோலங்கள்) நீ அழித்த போதும் உன்னை நாங்கள் கோபிக்க மாட்டோம். ஏனெனில் உனது திருமுகத்தில் இருப்பன வெறும் கண்களல்ல. அவை அருளைப் பொழியும் காமதேநு என்கிறாள். திருப்பாவையின் கடைசி பாசுரத்தில், தேவர்களுக்கு அமுதத்தினை அளிப்பதற்காக வங்கக் கடலினை கடைந்த ப்ரபாவமுள்ளவன் எனும் பொருள் பட, **'வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை'** என்கிறாள்.

**'தூமணி மாடத்து'** எனத் தொடங்கும் திருப்பாவை பாசுரத்தில் **'மா மாயன் மாதவன் வைகுந்தன்'** என்று ஸேவிக்கின்றாள். நாச்சியார் திருமொழி முன்றாம் பத்து பாசுரத்தின் பலச்ருதியில், **'மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கு இருப்பாரே'** என்கிறாள். நாச்சியார் திருமொழியில் ஐந்தாம் திருமொழியாக அமையும் குயில் பாட்டில் **'மன்னு பெரும் புகழ் மாதவன் மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்'** என்று தனது கை வளையல்கள் கழன்று விழுவதற்குக் காரணம் அந்தத் 'திருமகள் கேள்வன்' தான் என்றுருகிறாள்.

இந்தப் பாசுரங்கள் அனைத்திலும் நாம் காணும் ஒற்றுமை 'மாதவன்' என்ற பதம். 'மாதவன்' என்பதின் மூலம் கோதை நாச்சியார் அந்தப் பரமனின் ஏற்றம் அவன் 'திருமகள் கொழுநன்' என்பதினால் தான் என்று நிஷ்கர்ஷை பண்ணுகிறாள். தானே பூமிப் பிராட்டியானதனால் தன்னைக் கொண்டே அவனுக்கு ஏற்றம் என்ற அவளது அழகிய கர்வம் இங்கு பாங்குற ஸேவையாகும்.

**'அல்லிமாமலர் மங்கை மணாளா'**
**என்றுருகும் ஸ்ரீகுலசேகராழ்வார்**

ஸ்ரீகுலசேகரப் பெருமாள் ஸ்ரீஸூக்திகள் பிராட்டியினை முன்னிட்டு எம்பெருமானைக் கொண்டாடும் நயம் பேரானந்தம்.

'அழகிய இதழ்கள் பலவுள்ள தாமரைப்பூவில் ஜனித்தவளாம் பிராட்டியினது தோளுடன் இணைந்தவாறிருக்கும் எம்பெருமான்' எனும் பொருள்பட ஸ்ரீ குலசேகரப் பெருமாள் **'மா மலர் மங்கை தோளிணை தோய்ந்ததுவும்'** என்று பிராட்டியினை முன்னிறுத்தி எம்பெருமானைப் போற்றுகின்றார். இரண்டாம் திருமொழியில் அரங்கநாதனை அரங்கத்தே பள்ளி கொண்டவன் என்றழைக்காமல் **'அல்லிமாமலர் மங்கை நாதன் அரங்கன்'** என்றழைப்பதின் மூலம், அகன்ற இதழ்களைக் கொண்ட மிகச் சிறந்த தாமரை மலரில் உதித்தவளாம் பிராட்டியின் மணாளன் அரங்கன் என்கின்றார்.

மூன்றாம் திருமொழியில் **'தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய்'** எனத் தொடங்கும் பாசுரத்தில், **'அந்தாமரைப் பேதை மா மணவாளன்'** என்றுரைத்து, ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியின் வல்லபன் என்றேத்துகின்றார். ஆறாம் திருமொழியில் **'அல்லி மலர்த் திருமங்கை கேள்வன்'**என்று எம்பெருமானை பிராட்டியின் கேள்வனென கொண்டாடும் ஆழ்வார், எட்டாம் திருமொழியில் **'மைதிலி தன் மணவாளா'** என்று பிராட்டியினைக் கொண்டு எம்பிரானை ஏத்துகின்றார்.

ஸ்ரீ குலசேகரப் பெருமானின் ஸ்ரீஸூக்திகள், தாமரை மலரில் ஜனித்தவளாம் பிராட்டியுடனான பெருமான் என்றமைந்திருப்பது அந்த எம்பெருமான் 'ச்ரிய: பதி' என்பதற்கு பிரமாணமாக அமைகின்றன.

**நிலமங்கையினை 'திரு' எனக் கொண்டாடும்**
**திருமங்கை மன்னன்**

திருமங்கை ஆழ்வார் தமது ஸ்ரீ ஸூக்திகள் பலவற்றில் ச்ரிய: பதி என்பதினால் தான் எம்பெருமானுக்கு ஏற்றம் என்று நிர்தாரணம் பண்ணும் அழகினை ஸேவித்து மகிழ்வோம்.

**'நில மடந்தை தன்னை இடந்து புல்கிக் கோட்டிடை வைத்து அருளிய எம் கோமான்'** என்று வராஹாவதாரத்தை தொழுதேத்தும் அதே வேளையில், **'ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில் கொண்டான்'** என்று பாடி, பிராட்டியினைக் காத்து அழகியாம் அவளைக் கொண்டானென்று கூறுகிறார் திருமங்கை ஆழ்வார். **'தேனுடைக் கமலத்து திருவினுக்கு அரசே'** என்று பிராட்டியினது ப்ரபாவத்தினை நல்கும் திருமங்கை ஆழ்வார், **'அன்றாயர் குலக் கொடியோடு அணி மாமலர் மங்கையோடு அன்பளவி'** என்று அவளுள் அவள் தலைவனை அடக்குகின்றார்.

**'திருமடந்தை மண் மடந்தை இருபாலும் திகழ'** என்றும், **'மலர்மகளோடு மண் மகளும் உடன் நிற்ப'** என்றும் நவின்றதன்மூலம், ஸ்ரீதேவி மற்றும் பூமிப்பிராட்டியுடன் இருப்பதனால் எம்பெருமான் பெருமையுடன் திகழ்கிறான் என்று உபயநாச்சிமார்களைத் தொழுதேத்துகின்றார் திருமங்கை மன்னன். **'மலராள் தரணி மங்கை தாம் இருவர் அடி வருடும் தன்மையான்'** என்று உபயநாச்சிமார்களைக் கொண்டாடும் ஆழ்வார்,

**'இன் துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன்**
**நற் புவி தனக்கு இறைவன்**

**தன் துணை ஆயர் பாவை நப்பின்னை தனக்கு இறை'**

நப்பின்னையின் துணையாக நின்றவனே தன் இறைவன் என்று அவனை சிறப்பிக்கின்றார்.

எம்பெருமானது தோள் வலிமையினை ஏத்திப் பாடும் பதமாக, **'அல்லி மாதர் புல்க நின்ற ஆயிரம் தோளன்'** என்பதமைய, **'நில மகள் தோள் தோய்ந்தானை ஈரிரண்டு மால் வரைத் தோள் அம்மான் தன்னை'** என்று வலிய தோள்களையுடைய அவன் சாய்ந்து இதம் காண்பதும் பிராட்டியின் தோள்களில் தான் என்று நவில்கிறார்.

**'மா நில மா மகள் மாதர் கேள்வன் இவன் என்றும் வண்டு உண் பூ மகள் நாயகன்'** என்பதன் மூலம் இன்னாருடைய நாயகன் இவன் என்று கூறும் ஆழ்வார், **'தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு சுடர் ஆழி சங்கு இரு பால் பொலிந்து தோன்ற'** என்றுரைத்து, அவன் திருவாழித் திருச்சங்காழ்வானுடன் பொலிந்து நின்ற பேரழகில் பூரிப்படைகின்றார்.

திருமங்கை ஆழ்வார் கொண்டிருந்த ஈடு இணையில்லாத பக்தியானது, **'மற்றேல் ஒன்று அறியேன் மாயனே எங்கள் மாதவனே'** என்று பிராட்டியினை நோக்கி தவம் புரியும் எம்பிரானைப் போற்றி அவரை பாசுரம் ஸேவிக்கச் செய்கின்றது. **'உருகும் நின் திரு உரு நினைந்து'** என்று பிராட்டியிடத்தே நெகிழ்ந்து நிற்கும் எம்பெருமானை நினைத்து திருமங்கைபிரானை உருக்குவதாக அமைந்தது.

**எம்பெருமானின் அடையாளமாக பிராட்டியினைக் காட்டும் நம்மாழ்வார்**

**''என் திரு மார்வற்கு என்னை இன்னவாறு இவள் காண்மின் என்று மந்திரத்து ஒன்று உணர்த்தி யுரையீர்''** என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் அன்ன பக்ஷிகளுடன் ஸம்பாஷிக்கிறார். எதற்காக? தன்னுடைய திருவாம் பிராட்டியினை மார்பகத்தே ஏந்தியிருக்கும் எம்பெருமானிடம் அப்பக்ஷிகளை தூதனுப்புவதற்காக. இன்னாள் இவளென்று எம்பெருமானிடம் சென்று கூறி, அதற்கு அவனுரைக்கும் பதிலினை செவியுற்று வந்து என்னிடம் கூறுங்கள் என்கின்றார் நம்மாழ்வார். இவருக்கு பதிலுரைக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவனாம்? பிராட்டியினை மார்பகத்தே ஏந்தியிருப்பவனாம்.

நம்மாழ்வாரின் திருவாக்கினில் எம்பெருமானின் அடையாளம் பிராட்டி தான் என்பது தெளிவாகச் ஸேவையாகின்றது.

**''மடந்தையை வண் கமலத் திரு மாதினை தடம் கொள் தார் மார்பினில் வைத்தவர்''** – இங்கு 'வண் கமலத் திரு மாது' என்பது பிராட்டியினைக் குறிக்கும் பதங்களாக அமைந்தது. 'தடம் கொள் தார் வைத்தவர்' என்ற பதங்கள் அழகிய தாமரைப் பூவில் ஜனித்த பிராட்டியினை தனது திருமார்பினில் ஏந்தியவன் எம்பெருமான் என்ற பொருளினைக் கொண்டது. எம்பெருமானின் பராக்ரமங்களை நவிலாது, பிராட்டியினை தனது திருமார்பினில் ஏந்தியுள்ளதே அவனது பெருமை என்று ஆழ்வார் ஸாதித்திருப்பது ப்ரமாண வாக்யமாக அமைகின்றது.

தனக்கு ஆதாரமென்று ஏதுமில்லாதவனும், சேதனாசேதனங்களுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பவனுமான எம்பெருமான், 'பிராட்டியின் மணாளன்' என்பதினால் ஏற்றம் பெறுகின்றான். கர்ம பத்தர்களாகிய ஜீவன்கள் அடைவதற்கு ஏற்றவனாகவும், அத்தகைய ஜீவன்களால் அடையப்படுபவனாகவும் விளங்கும் பிராட்டியுறை மார்பனாம் ஸ்ரீஹரியினை அடைவதே புருஷார்த்தம் ஆகும். அதற்கு, ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் மனதினை இருத்தி, அவர்தம் ஹ்ருதயத்தினின்றுதித்த பாசுரங்களினை நித்தம் அநுஸந்தித்து, அந்தப் பரமனடி பற்றுவதே நம் கர்மத் தளைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள ஒரே மார்க்கமாகின்றது.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 4. ☎ 24953799

**தர்சன நேரம்:**
காலை 8.30 முதல் 10.30 வரை
மாலை 4.30 முதல் 6.30 வரை
இரவு 7.45 மணிக்கு சயனம்

ஸ்ரீ:

# குற்றம் அறியாத கோவலனார்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் எப்படி இருக்க வேண்டுமென்பதை ஸ்வாமி பெரியாழ்வார் தமது திருக்கோட்டியூர் பதிகத்தின் (பெரியாழ்வார் திருமொழி 4-4) மூலம் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். குறிப்பாக இரண்டாம் பாசுரத்தில் ***"குற்றமின்றி குணம்பெருக்கிக் குருக்களுக்கு அனுகூலராய் செற்றம் ஒன்றும் இலாத வண்கையினார்கள்''*** என்று அவ்வூர் வாழ் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருக்குணங்களைப் போற்றி, அவர்களைப்போல் எம்பெருமான் மற்றும் அவன் பாகவதர்களிடத்தில் ஒருவிதமான குற்றமுமில்லாமல் சமம், தமம் முதலிய நற்குணங்களை வளர்த்துக்கொண்டு, தத்தம் ஆசார்யர்களுக்கு கைங்கர்யம் பண்ணுவதற்குப் பாங்காயிருப்பதும், பொறாமை என்பது சிறிதும் இல்லாதிருப்பதே உண்மையான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம், அதனை வளர்த்துக் கொள்வதே நமக்குக் கர்தவ்யம் என்று தலைக்கட்டுகிறார். இருப்பினும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் நமக்கு உண்டாகும் விபரீத ஞானமானது நம் லக்ஷணத்துக்கு விரோதமாய், எம்பெருமானிடத்தில் பலவித தோஷங்களைச் செய்வித்து அவனிடத்தில் மீண்டும் மீண்டும் மிகுந்த அபசாரப்படவைக்கிறது. இது அவனுக்கு நம்மீது மிகுந்த சீற்றத்தை உண்டு பண்ணுமே என்ற பீதி உண்டாகும். ஆனால் சரணடைந்த ஆச்ரிதர்கள் விஷயத்தில் அவன்தான் **''அவிஜ்ஞாதா** (அறியாதவன்)'' (ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்) வாயிற்றே.

ஸர்வஜ்ஞனான எம்பெருமான் அறியாத பதமென்று ஒன்றிருக்குமோ? எம்பெருமானை ஸர்வஜ்ஞாதா என்றழைப்பது அல்லவோ பொருந்தும். அப்படியிருக்க இங்கு அறியாதவன் என்று எதனைச் சொல்லிற்று?

இது, எம்பெருமான் தன்னளவிலே ஆச்ரிதர்கள் எத்தனை அபசாரப்பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீறாமல் அவர்கள் மேல் கொண்ட பக்ஷபாதத்தினால் அவர்கள் செய்யும் பல்லாயிரம் குற்றங்களையும் பொறுக்கும் அவனின் வாத்ஸல்யத்தைச் சொல்லிற்று.

நம் பூர்வாசார்யர்கள் பாபங்களை இருவகைப் படுத்துகின்றனர்.

- **பூர்வாகங்கள்:** எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு புத்திபூர்வமாகப் பண்ணும், அனுபவித்தே தீர்க்க வேண்டிய பாபங்கள்.
- **உத்தராகங்கள்:** ப்ரபத்தி அநுஸந்தானத்திற்குப் பிறகு ப்ரக்ருதி பாரவச்யத்தாலே ப்ராமாதிகமாக நேரும் பாபங்கள்.

எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் ஸாதிக்கிறார்: ***மநோவாக்காயை: அநாதி கால ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்ய கரண கிருத்ய அகரண பகவதபசார பாகவதபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்த அபசாராந், ஆரப்த கார்யாந், அநாரப்த கார்யாந், க்ருதாந், க்ரியமாணாந், கரிஷ்யமாணாம்ச்ச ஸர்வாந்.*** (சூர்ணிகை – 10).

அதாவது மனம், மொழி, மெய் என்ற முக்காரணங்களாலும் அநாதி காலமாக விளைந்த அளவிறந்த செய்யத் தகாத காரியங்களைச் செய்வதும், செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாதிருப்பதும், எம்பெருமானிடத்திலும் அவனடியார்களிடத்திலும் அபசாரப்படுகையும், இருவரிடத்திலும் பொறுக்கவொண்ணாத அபசாரப்படுதலும், சென்ற காலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலம் ஆகிய முக்காலங்களிலும் செய்யப்படுகிற அனைத்து விதமான குற்றங்கள் என்று இன்னும் சற்றே விரிவாக ஸ்தாபிக்கிறார்.

இப்படி பலவிதங்களில் அடியவர்கள் தோஷங்களை இழைத்தாலும் எம்பெருமான் அக்குற்றங்களை உபேக்ஷியாது இருக்கிறான் என்று மேலே கூறிய ஸஹஸ்ரநாம வாக்கியத்தில் கண்டோம். இதே கருத்தை வேதங்களின் ஸாரமான திவ்யப்ரபந்தங்களிலும் அதன் வ்யாக்யானங்களிலும் நம் ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு ஸேவித்து அநுபவிப்போம்.

ஸ்ரீமந் நாராயணன் தன்னைச் சரணடையும் சேதனர்களின் பாபங்கள் அனைத்தையும் போக்கி அவர்களை உய்விக்கவே தன் பரத்வ ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் பற்றுவதற்கு ஹேதுவாய் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து இ(ற)ரங்கி வந்து கருணைக்கடலாய் ஸ்ரீநிவாஸனாக திருமலையில் நித்யவாஸம் செய்கிறான். அப்பேற்பட்ட திருவேங்கடவனிடம் பரிபூர்ண பக்தி பண்ணுபவர்களின் பூர்வாகங்கள் **(கடங்கள்)** மற்றும் உத்தராகங்கள் **(மேல்வினை)** வெந்துபோகும் என்பது ஸ்வாமி நம்மாழ்வார் திருவாக்கு.

*''வேங்கடங்கள் மெய்ம்மேல்வினை முற்றவும்*
*தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்*
*வேங்கடத்து உறைவார்க்கு நமவென்னலாம் கடமை*
*அது சுமந்தார்கட்கே'' [திருவாய்மொழி 3-3-6]*



திருவேங்கடவன் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களை உடையவனாயிருப்பினும் அவனுடைய மற்ற குணங்களனைத்தும் தரம் பெறுவது அவன் தயையாலேயே என்பதனை ''தயா சதகம்'' என்னும் ஸ்தோத்ரரத்னத்தின் மூலம் ஸ்வாமி தேசிகன் நிர்தாரணம் பண்ணுகிறார். மேலும்,

*''மற்றொரு பற்றின்றி வந்தடைந்தார்க்கெல்லாங்*
*குற்றமறியாத கோவலனார் - முற்றும்*
*வினைவிடுத்து விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார்*
*நினைவுடைத்தாய் நீமனமே நில்லு.'' [அம்ருதரஞ்சனி - 36]*

என்று அவன் திருத்தாள்களில் சரணடைந்த எல்லாருடைய விஷயத்திலும் கோபாலனாக அவதரித்த பரமபதநாதன் அவர்கள் செய்த குற்றங்களை ஒரு நாளும் பொருட்படுத்தமாட்டான். ஆகையால் கவலை வேண்டா என்று எம்பெருமானின் அபராதஸஹத்வத்தை முன்னிட்டு தன் திருவுள்ளத்திற்கு உபதேசம் செய்தருளுகிறார் ஸ்வாமி தேசிகன்.

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் ஸ்வாமி கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவத்தில் பேரருளாளனின் வாத்ஸல்யத்தை அனுபவிக்கையில் ***''உபாலம்போயம் போ: ச்ரயதி பத ஸார்வஜ்ஞ்யமபி தே யதோ தோஷம் பக்தேஷ்விஹ வரத நைவாகலயஸி''*** (வரதராஜஸ்தவம் - 20) என்று அருளுகிறார். அதாவது பக்தர்களின் தோஷங்கள் ஸ்வல்பமன்றியே மலைமலையாய் குவிந்திருந்தாலும் அவற்றை அறியாதொழிவது எம்பெருமானுக்கு அவிஜ்ஞாதா என்ற திருநாமத்துக்கு பொருந்துமே தவிர ஸர்வஜ்ஞத்வாநுகுணமாகாது என்றருளுகிறார்.

திருமழிசைப்பிரான் திருச்சந்தவிருத்தத்தின் 110ம் பாசுரத்தில் ***''நின்னை நாயினேன் வணங்கி வாழ்த்தும் ஈதெலாம் நீயும் நின்குறிப்பினில் பொறுத்து நல்கு''*** என்று தான் செய்த குற்றங்களை க்ஷமித்தருள வேண்டுமாறு எம்பெருமானிடத்தில் ப்ரார்த்தித்து பின்பு அவனுடைய தயையென்னும் குணவிசேஷத்தை ஆராய்ந்து பார்த்து மேல்பாசுரத்தில்

*''வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கு, மாறில்போர்*
*செய்துநின்ன செற்றத்தீயில் வெந்தவர்க்கும், வந்துன்னை*
*எய்தலாகுமென்பர் ஆதலால் எம்மாய! நாயினேன்,*
*செய்தகுற்றம் நற்றமாகவேகொள் ஞாலநாதனே''*
*[திருச்சந்தவிருத்தம் - 111]*

என்று வேண்டுகிறார். அதாவது **'அவிஜ்ஞாதா'**வான எம்பெருமானுடைய திருவுள்ளம் புண்படும்படி **''பொறுத்துநல்கு''** என்று ப்ரார்த்திப்பது மஹாபசாரமென்று தன் திருவுள்ளம் அநுதபித்து, அவ்வெம்பெருமானுடைய வாத்ஸல்ய குணத்துக்குத் தகுதியாகப் பேசுகிறார்.

**ஏலும் ஆடையும் அஃதே** (திருவாய்மொழி 4-3-5) என்ற பாசுரத்தின் ஈட்டு வ்யாக்யானத்தில் எம்பெருமானின் வாத்ஸல்யம் விஷயமாக ஒரு ஐதிஹ்யம் காட்டப்பெறுகிறது.

திருவரங்கம் பெரிய கோயிலில் திருப்பரிவட்டங் களைத் துவைக்கும் கைங்கர்யம் செய்து வந்த

ஸ்ரீவைஷ்ணவ வண்ணான் ஒரு நாள் அழகிய மணவாளனின் பரிவட்டங்களை நன்றாக துவைத்து வெளுத்து அவற்றை உடையவரிடம் கொண்டு காட்ட, மிகவும் வெளுக்கப்பட்டிருந்த அவை களைக் கண்ட எம்பெருமானார் திருவுள்ளம் மிக்க மகிழ்ச்சியடைந்து அவனின் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு பெருமாள் சன்னதிக்கு எழுந்தருளி, பெருமாளிடம் ***''இவன் வெகு மநோஹரமாகத் திருப்பரிவட்டம் திருத்திக்கொண்டு வந்திருக்கிற படியைத் திருக்கண் சாத்தியருள வேணும்'''*** என்று விண்ணப்பித்து அவ்வாடைகளைக் காட்டியருள, அழகிய மணவாளனும் கண்டு உகந்தருளி உடையவரை நோக்கி ***''வாரீர்! இவனுக்காக முன்பு ரஜகன் நம்திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்''*** என்று திருவாய்மலர்ந்தருளினார். கண்ணபிரானும் பலராமனும் அக்ரூரரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளினபோது அவ்வூர் இராஜவீதியில் கம்சனுடைய வண்ணான் துணிமூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, இவ்விருவரும் அவனிடத்தில் வஸ்த்ரம் கேட்க அவன் கொடுக்க மறுத்தொழிந்தது அவ்வண்ணான் செய்த குற்றம். (ஸ்ரீ விஷ்ணு புராணம் 5-19) .

இவ்வைதிஹ்யத்தின் மூலம் எம்பெருமான் நம் மீது கொண்ட கருணையானது பல யுகங்கள்/ திருவவதாரங்களுக்கு அப்பாற்பட்டும் பொருந்தும் என்பது தெளிவாகும்.

*''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும்*
*சிதகுரைக்குமேல்*
*என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்*
*என்பர் போலும்*
*மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி*
*மலர்கண்வைத்த*
*என்னுடைய திருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்கு*
*ஆளாவரே?'' [பெரியாழ்வார் திருமொழி 4-9-2]*

மேலே சொன்ன அனைத்திற்கும் முடி சூட்டினார்போலே அமைந்துள்ள பாசுரம் இது. எம்பெருமானுடைய அடியவர்கள் விஷயத்தில் புருஷகாரம் பண்ணக்கூடியவளான பெரியபிராட்டியே சில நேரங்களில் எம்பெருமானின் திருவுள்ளத்தை சோதிக்கக் கருதி சேதனர்களின் குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்லத் தொடங்குவாளாம். அதற்கு எம்பெருமான் பிராட்டியைக் குறுக்கிட்டு ''***இவ்வுலகில் பிழை செய்தார் யார்? என்னடியார்கள் ஒருக்காலும் குற்றங்களைச் செய்ய மாட்டார்கள்''***. என்பனாம். பிராட்டியோ விடமால் ''அவர்கள் குற்றம் செய்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை'' என்று நிர்பந்தித்துச் சொல்ல அதற்கு எம்பெருமான் ''***அடியார்கள் செய்யும் குற்றங்களை நான் அவர்களின் குணமாகவே ஏற்கிறேன். என்னடியார்கள் குற்றம் செய்யார்கள். அப்படியே செய்தாலும் அவர்கள் நன்மையையே செய்தார்கள்''*** என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறுவனாம். என்னடியார் குற்றஞ்செய்யார்கள் என்று சொல்லவேண்டும் என்ற போதிலும் ''குற்றம்'' என்ற சொல்லை எம்பெருமான் தன் திருவாயால் சொல்லக்கூசி ''என்னடியார் அது செய்யார்'' என்று கூறி முடிப்பனாம்.

இவ்வாறாக இப்பாசுரத்தின் மூலம் பெருமாளும் பிராட்டியும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஆச்ரித பக்ஷபாதத்தை வெளிப்படுத்துவதாக ஸ்வாமி பெரியாழ்வார் மிக அழகாக ஸாதிக்கிறார்.

எம்பெருமானின் வாத்ஸல்யமானது அடியவர்கள் செய்யும் தோஷத்தை மன்னித்து ரக்ஷிக்கச் செய்கிறது. அப்படியென்றால் நாம் குற்றங்கள் செய்யலாம் என்ற அர்த்தம் அன்று. க்ஷமிப்பது அவனின் இயல்பு குணம். அவனிடத்திலும் அவன் அடியார்களிடத்திலும் குற்றங்கள் செய்யாமல் நம் ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் நமக்கு இட்ட கட்டளைப்படி அவனைச் சரணடைந்து அவனுக்கு கைங்கர்யம் செய்வதே ஒரு சேஷனின் ஆத்ம ஸ்வரூபத்திற்கு அழகு. அக்குணத்தை வளர்த்துக்கொள்வதே நமக்கு உசிதம்.

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

**பேயாழ்வார் உத்ஸவம் (10 நாட்கள்)**
அக்டோபர் 17 (சனி) முதல் 26 (திங்கள்) வரை
**சாற்றுமுறை** – அக்டோபர் 26 (திங்கள்)

**நவராத்ரி உத்ஸவம்**
அக்டோபர் 17 (சனி) முதல் 25 (ஞாயிறு) வரை
**மஹாநவமி** – அக்டோபர் 25 (ஞாயிறு)
**விஜயதசமி** – அக்டோபர் 26 (திங்கள்)

**சேனைநாதன் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 22 (வியாழன்)

**ஸ்ரீ தேசிகன் 27ஆம் நாள் விடாயாற்றி உத்ஸவம்**
அக்டோபர் 23 (வெள்ளி)

**பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 24 (சனி)

**பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 25 (ஞாயிறு)

**பஞ்சமி தீர்த்த உத்ஸவம் (9 நாட்கள்)**
நவம்பர் 11 (புதன்) முதல் 19 (வியாழன்) வரை

**தீபாவளி உத்ஸவம்**
நவம்பர் 14 (சனி)

**அன்னகூட உத்ஸவம்**
நவம்பர் 15 (ஞாயிறு)

# 14. Sri Achyutha Sathakam

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Achyutha Sathakam is a unique hymn by Swami Desika, set in Praakruth, an unrefined variation of the Sanskrit language. The addressee of the Sthothra is Lord Achyutha, another name for Devanatha of Thiruvaheendrapuram. ‘Achyutha’ means ‘one who does not let slip’, implying that He is one who does not let His devotees down. It is only apt that ‘Daasa Sathya’ or ‘Adiyavarkku Meyyan’ is called ‘Achyutha’ as He is one who would not give up His devotee as He is truthful to him.

A contextual reference can be drawn from Sri Desika’s Tamil Prabandham ‘Navamani Maalai’ (நவமணி மாலை). Here, our Acharya most aesthetically conjures up situations wherein the Lord has donned the role of ‘saviour’ as he seeks His emphatic protection for himself:

‘அஞ்சல் அஞ்சல் அஞ்சல்’ என்று அளிக்கவேண்டும் அச்சுதா
அடியவர்க்கு மருள் இயக்கும் அடியவர்க்கு மெய்யனே! (8)

The use of ‘Achyutha’ and ‘Adiyavarkku Meyyane’ in one breath makes for enjoyable study while underlining the above point.

A Sathakam, as we have already seen (in Sri Daya Sathakam), denotes a century of Slokas and the customary signing off in the final verse (101st) caps this hymn, a rare gem. This Sthothra confers on Lord Devanatha the distinction of the lone recipient of compositions (totalling nine) in three different languages by the great master, as provided in the following break-up.

**In Tamil (7):** MummanikKovai, Navamani Maalai, Pandhu, Kazhal, Ammaanai, Oosal, Esal (except the first two, others are obsolete now);

**In Sanskrit (1):** Sri Devanayaka Panchasath;

**In Praakuth (1):** Sri Achyutha Sathakam.



In the olden days, Praakruth found extensive usage in stage-plays. It was considered fit to be spoken by people from low rungs, women, illiterates, and court-jesters. The learned also used it when having to speak with these people. It is inferred that the tough grammar, pronunciation and the regal elegance of Sanskrit were out of the grasp of these people. They used the language in a haphazard manner which gradually paved the way for the ‘Praakruth’ dialect, which is essentially colloquial in tone and nature. There are ancient evidences to the effect that the language is fit only for women etc., but the fact that it acquired a grammar of its own gave it an identity of its own.


Possibly, the general impression that women were among its ‘rightful’ users, gave the author the idea to employ the same in this hymn in which he assumes the ‘Nayika Bhava’ (role of a woman) a la Nammazhwar and Thirumangai Azhwar, who have handled this in greater

proportions in expressing their devotion to God.

The reason why Swami Desika chose Achyutha for expressing the Nayika Bhava in Praakruth could be because he was so lost in the beauty of this very Lord (exemplified in Sri Devanayaka Panchasath) that when the idea of romance sparked, Achyutha was right there in the forefront of his mind. That there are similar instances (of Nayika Bhava) in Devanayaka Panchasath itself and MummanikKovai strengthens this inference.

In this Sthothra also, the author stamps his class throughout as only he can. Starting off the hymn with an animated call to the devotees to worship the Lord who has four names, i.e., Devanatha, Daasa Sathya, Achyutha and Sthira Jyothi, he makes an interesting submission marked by modesty, in the fourth sloka. He says, "Amidst the line-up of the great Vedas which extol your greatness in the assembly of Nithyas and Mukthas, let this simplistic hymn of mine be like the words of a jester; but just as kings take pleasure in the words and deeds of jesters, you should also accept and enjoy my rambling".

Further along the line, Sri Desika explores the various attributes that conclusively establish His supremacy, indulges in his pet topic –




**Lord Devanatha**

Thirumeni Varnanam, speaks about the greatness of those surrendering to Him, the bliss and extra-ordinary experience that await those Prapannas in the Archiraadhi Marga and Sri Vaikunta, among other things. There is a spell of verses soaked in his patented and moving self-deprecation.

Since the language as it is spoken is unrefined, the hymn when recited is sweet to the ears and resembles the prattling of children. The tone and tenor of this dialect may be lowly but it does not take away a wee bit of class and the content's richness from the hymn. On the contrary, Swami Desika combines his characteristic poise and panache in presenting through this Sthothra, profound Vedic truths and principles of our philosophy. Indeed, a testimony to the author's versatility, if any is required.

Conspicuously, there is no Phala Sruthi as such for this Sthothra. "May this sweet, beautiful and meritorious Achyutha Sathakam, composed by the 'Lion among poets and logicians' and the 'Acharya of Vedantha', Venkatesa, live resplendently in the hearts of noble devotees," says the author as he signs off in style. So, enjoying the beauty of the hymn can, in fact, be considered as the real benediction.

*To be continued...*



*With Best Compliments from:*

**Kozhiyalam Family**

27, Venkatesa Agraharam, Mylapore, Chennai 600004.

**In Memory of Sri K. Srinivasan**

**SVDD thanks Kozhiyalam Family**

for sponsoring this month's issue of Desika Sandesam



